எண்.106/ 2026 நாள்: 09.09.2026

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்
எண்.3, தேர்வாணையச் சாலை, சென்னை – 600 003
செய்தி வெளியீடு

ஒருங்கிணைந்த தொழில்நுட்பப் பணிகள் (பட்டயம் / தொழிற்பயிற்சி நிலை) (அறிவிக்கை எண். 10/2025, நாள் 13.06.2025 மற்றும் அதன் பிற்சேர்க்கைகள்) தேர்வில் அடங்கிய பதவிகளுக்கான தேர்வு முடிவுகள், தேர்வர்களின் மதிப்பெண் மற்றும் தரவரிசை விவரங்கள் 27.02.2026 அன்று தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டன.

ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வில் (பட்டயம் / தொழிற்பயிற்சி நிலை) அடங்கிய கீழ்கண்ட பதவிகளுக்கான இரண்டாம் கட்ட கணினி வழித்திரை சான்றிதழ் சரிபார்ப்பிற்கு (Onscreen Certificate Verification-II) தேர்வர்கள் பெற்ற மதிப்பெண்கள், ஒட்டுமொத்த தரவரிசை எண், இடஒதுக்கீட்டு விதி, காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை மற்றும் நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளின் அடிப்படையில் தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட தேர்வர்களின் பதிவெண்கள் கொண்ட பட்டியல் தேர்வாணைய இணையதளத்தில் 09.09.2026 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

பதவியின் பெயர்	பதவிக் குறியீடு
இளநிலை தொழில் வினைஞர் (கம்மியர் மோட்டார் வாகனம்)	3655, 3689, 3690, 3691, 3692, 3693, 3694
இளநிலை தொழில் வினைஞர் (மின் பணியாளர்)	3659, 3683, 3684, 3685, 3686, 3687, 3688
இளநிலை தொழில் வினைஞர் (பற்றவைப்பவர்)	3658, 3695, 3696, 3697
இளநிலை தொழில் வினைஞர் (பொருத்துநர்)	3657, 3699, 3700
இளநிலை தொழில் வினைஞர் (தட்பவெப்பவியல் கட்டுப்படுத்தும் கம்மியர்)	3661

திரு.பானோத் ம்ருகேந்தர் லால், இ.ஆ.ப.,
செயலாளர்